### அதிக வருமானமே பண்டிகை உற்சாகம் தரும்:

# தீபாவளியை கடன் வாங்கி கொண்டாட 85 சதவீதம் பேர் விரும்பவில்லை

## கருத்து கணிப்பில் தகவல்

சென்னை, அக்.22-
தீபாவளியை கடன் வாங்கி கொண்டாட 85 சதவீதம் பேர் விரும்பவில்லை என்பது கருத்து கணிப்பில் தெரியவந்துள்ளது.

**கைதாண்டும் செலவுகள்**

தீபாவளி பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டாலும், அதன் பின்னணியில் குடும்ப பொருளாதாரம் முதுகெலும்பாக உள்ளது. வருமானத்துக்கும் குடும்ப பொருளாதாரத்துக்கும் ஏற்ற வகையில் செலவு செய்யும் குடும்பம்தான் எல்லா நாட்களிலும் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறது.

ஆனாலும் தீபாவளி போன்ற பண்டிகை தினங்களில் செலவுகள் எப்போதுமே சற்று கைதாண்டி செல்வது வழக்கமானதுதான். இதில் நடுத்தர குடும்பங்களின் நிலை பரிதாபமானது.

**கல்வி நிறுவனம் ஆய்வு**

தற்போதைய காலகட்டத்தில் உடைகள், எலக்ட்ரானிக் சாதனங்கள் போன்ற பொருட்களில் ஏராளமான வகைகள் உள்ளதால், எதை எடுப்பது, எதைத்தவிர்ப்பது என்பதில் வாடிக்கையாளர்களுக்கு எப்போதுமே குழப்பம் உள்ளது.

இந்த சூழ்நிலையில் சென்னை மேற்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீசாய்ராம் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் இயக்குனர் கே.மாறன், பேராசிரியர்கள் மற்றும் எம்.பி.ஏ. மாணவர்கள் சார்பில் தமிழகம் முழுவதும் 2,200 நபர்களிடம் 2014-ம் ஆண்டுக்கான தீபாவளி குடும்ப பட்ஜெட் குறித்து நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் ஆய்வு நடத்தினர்.

**எவ்வளவு பட்ஜெட்?**

விவசாயிகள், சிறுதொழில், கூலிவேலை செய்வோர், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் என பல்வேறு தரப்பினரிடம் ஆய்வு நடத்தப்பட்டது. ஒவ்வொருவரிடமும் தீபாவளி செலவுக்கான பட்ஜெட் எவ்வளவு போடப்பட்டுள்ளது? என்ற பொதுவான கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு ரூ.5 ஆயிரத்துக்கும் குறைவாக செலவு செய்ய விருப்பம் என்று 35.5 சதவீதத்தினரும்; ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.15 ஆயிரம் வரை செலவு செய்ய விருப்பம் என்று 45 சதவீதத்தினரும்; ரூ.15 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்ய விருப்பம் என்று 15 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்தனர்.

**ஆடைக்கு முக்கியத்துவம்**

எந்தப்பொருட்களுக்கு அதிக செலவு செய்ய விருப்பம் என்று கேட்டதற்கு ஆடை வாங்குவதே மிக முக்கியம் என்று 69 சதவீதம் பேரும், முக்கியம் என்று 28 சதவீதம் பேரும் கூறினர். பட்டாசு வாங்குவதை மிக முக்கியம் என்று 32 சதவீதம் பேரும், முக்கியம் என்று 51 சதவீதம் பேரும், முக்கியம் இல்லை என்று 17 சதவீதம் பேரும் கருத்து கூறியுள்ளனர்.

மிக முக்கியம் என்று பலகாரம் வாங்குவதை 37 சதவீதம் பேரும், அணிகலன் வாங்குவதை 17 சதவீதம் பேரும், அசைவ உணவுக்கு 35 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

**சொந்த வருமானமே**

ஆடை வாங்குவதில் குழந்தைகளுக்கே முக்கியம் அளிப்பதாக 45 சதவீதம் பேரும், கணவன் அல்லது மனைவிக்கு முக்கியத்துவம் அளிப்பதாக 7.4 சதவீதம் பேரும் கருத்து கூறியுள்ளனர். தீபாவளிக்கு கடையில் இனிப்பு வாங்கவில்லை என்று 57 சதவீதம் பேரும், கடன் வாங்கி ஆடைகள் வாங்க விருப்பம் இல்லை என்று 17 சதவீதம் பேரும் கூறியுள்ளனர்.

தீபாவளி செலவுகளை சொந்த வருமானத்தில் இருந்து செலவழிப்பதற்கு 85 சதவீதம் பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர். விலைவாசி ஏற்றத்தினால் தீபாவளிச் செலவுகளை அதிக சுமை என்று 73 சதவீதம் பேர் கூறியுள்ளனர். இந்தத் தீபாவளிக்கு 30 சதவீதம் பேர் அசைவ உணவுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

**முக்கியத்துவம் இல்லை**

இந்த ஆய்வின்படி, நபர்களிடம் அதிகமான வருமானம் காணப்படவில்லை என்பதும், எனவே தீபாவளி பொருட்கள் வாங்குவதற்கான முக்கியத்துவமும் அதிகமாக காணப்படுவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.